DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.607/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | | | |
| Name | : | பூமி | Age | : | 53 |
| S/o | : | நாகசாமி | Occupation | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Village | : | கேணிக்கரை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27th day of May 2026.

**27.05.2026**

**(எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கை பதிவு செய்த புலன் விசாரணை மேற்கொண்ட குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு. கணேசலிங்கபாண்டி என்பவர் பணி மாறுதலால் சென்றுவிட்டபடியாலும் அவர் எங்களது காவல்நிலையத்தில் பணிபுரிந்ததால் அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் வழக்கு கோப்பை பார்த்து அவருக்காக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று சாட்சியம் அளிக்கிறேன். இராமநாதபுரம் புல்லங்குடியில் இருக்கும் முனியாண்டி பிள்ளை மகன் பாலுச்சாமி நிலையம் ஆஜராகி ஆய்வாளரிடம் கொடுத்த புகாரைப் மனுவை பெற்று நிலைய மனு ரசீது எண்.28/2015 பதிவு செய்துள்ளார். கடந்த 23.01.2015–ம் தேதி 19.00 மணியளவில் கேணிக்கரை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.கணேசலிங்கபாண்டி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திரு.கணேசலிங்கபாண்டி என்பவர் மேற்படி புகாரின் அடிப்படையில் கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 43/2015 பிரிவுகள் 294(பி), 506(1) இதசவாக வழக்குப்பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை சார்பு ஆய்வாளர் திரு.கணேசலிங்பாண்டி தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியாண்டி மற்றும்

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.05.27 12:21:10 +0530

சண்முகவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

**(மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வைமகஜர் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் பாலுச்சாமி, சிவசாமி, முருகன், முனியாண்டி மற்றும் சண்முகவேல் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை கடந்த 27.01.2015 ம் தேதி அன்று இரவு சுமார் 19.30 மணி அளவில் இராமநாதபுரம் புதிய பேருந்துநிலையம் அருகில் வைத்து உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களை பின்பற்றி கைது செய்து, அவரை நிலைய பிணையில் விடுவித்துள்ளார். இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 294(பி), 506(1) இதச ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார்தாரரிடம் இருந்து புகார் மனு எதுவும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் பேரில் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை இந்த வழக்கில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை உற்பத்தி செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :</u> இல்லை

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.27 12:20:53 +0530